[25th March 1969

Text Books for Biology.

*208. *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government propose to publish Text Books for the Elective subject, Biology for Standards X and XI; and

(*b*) if so, the details thereof?

உயிரியலுக்குப் பாட நூல்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 10-வது, 11-வது படிவங்களுக்குரிய விருப்பப் பாடமாகிய உயிரிய லுக்கு பாட நூல்களை வெளியிட அரசாங்கம் எண்ணுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) ஆம். 10, 11 வகுப்புகளுக்கான உயிரியல் (விருப்பப் பாடம்) தமிழ்ப் பாடப் புத்தகங்கள் கல்வித்துறை மூலமாக வெளியிடப்படுகின்றன.

(இ) பத்தாம் வகுப்புக்கான உயிரியல் (விருப்பப் பாடம்) தமிழ்ப் பாடப் புத்தகம் வெளியிடப்பட்டு கடந்த (1967–68) விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 11-ம் வகுப்புக்கான உயிரியல் பாடப் புத்தகமும் இந்த ஆண்டில் (1968–69) வெளியிடப்பட்டு விற்பனைக்கு அனுப்பி வைக்கப் பட்டன.

Family Pension Applications.

*209. Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:—

(*a*) the number of applications for family pension from widows of deceased teachers pending in the office of the District Educational Officer, Mayuram as on 1–8–1968; and

(*b*) the reasons therefor?

குடும்ப ஓய்வூதிய மனுக்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இறந்துபோன ஆசிரியர்களின் மனைவியரிடமிருந்து குடும்ப ஓய் வூதியம் கோரி வந்த மனுக்களில் எத்தனை மனுக்கள் மாயூரம் மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் 1—8—1968 வரையில் முடிவு செய்யப் படாமல் உள்ளன ?

(இ) அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இரண்டு.

(இ) ஒரு தேர்வில் குடும்ப ஓய்வூதியம் அளித்து ஏற்கனவே ஆணை கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மற்றொரு தேர்வில் கடலூர், மதுரைத் தலைமைக் கல்வி அதிகாரிகளிடமிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு வரு கின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறுவதற்கு எத்தனை வருஷம் வேலை அனுபவம் இருக்கவேண்டும் ?

25th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. இரண்டு தனிப்பட்ட ஆசிரியர்களைப் பற்றிக் கேட்கப் பட்ட கேள்வி தான் இது.

Chokkeswarar Temple, Kancheepuram

* 210. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Chokkeswarar Temple built by Paranthagan at Kancheepuram is in a dilapidated condition; and

(*b*) whether there is any proposal to renovate the above temple?

சொக்கீஸ்வரர் கோவில், காஞ்சீபுரம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) காஞ்சீபுரத்தில் பராந்தகன் கட்டிய சொக்கீஸ்வரர் கோயில் இடிந்து பாழடைந்துள்ளதா ?

(இ) இக்கோயிலை புதுப்பிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) ரூ. 6,400 மதிப்பீட்டுச் செலவில் கோவில் திருப்பணி நிறை வேற்றுவதற்குப் புதைபொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர் அனுப்பிய செயற் குறிப்புகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. வேலை நிறைவேறி வருகிறது.

Single-teacher schools

* 211. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of single-teacher schools in Tamil Nadu as on 1–11–1968;

(*b*) the teacher-pupil ratio of these schools; and

(*c*) whether there is any proposal to change this system?

மாண்புமிகு திரு எஸ். மாதவன் :

(அ) 2,452.

(இ) 1 : 20

(உ) இல்லை.

THIRU G. KRISHNAMOORTHY : Sir, is there any scheme to just see that plural teaching is avoided in these single-teacher schools?

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஓர் ஆசிரியர் பள்ளிகளை நாம் திட்டத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிற வரை, அதைத் தவிர்க்க முடியாது என்று கருதுகிறேன். ஓராசிரியர் பள்ளி சிறு சிறு கிராமங்களுக்குத் தேவையாக இருப்பதால் குறைந்த பட்சம் 20 மாணவர்களாவது இருந்தால் அதை அனுமதிக்கிறோம்.